**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE,**
**KANNIYAKUMARI AT NAGERCOIL.**

18.06.2026

O.S. No. 331/2022

P.W. 1 திரு. அண்ணாதுரை

சாட்சி மீண்டும் இன்று அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி (பிரதிவாதி தரப்பில்) -**

முத்தாரம்மன் கோவிலில் வேறு ஜாதிக்காரர்கள் பூஜை செய்வார்கள் என்றும், வழிபடுவார்கள் என்றால் சரியல்ல. முத்தாரம்மன் கோவிலில் சொத்தின் கிழக்கே சுடலைமாடன் கோவில் உள்ளதா என்றால் சரிதான். அதுவும் எங்கள் சமுதாயத்தை சேர்ந்தவர்கள்தான் வழிபடுவார்கள். சுடலைமாட சுவாமி முகத்தில் மஞ்சாணை வேறு ஜாதிக்காரர்கள் பூசுவார்களா என்றால் இல்லை. எங்கள் ஜாதிக்காரர்கள் மட்டும்தான் பூசுவார்கள். பஜனை மடம் இருக்கிறதா என்றால் தற்போது இல்லை. 2007 க்கு முன்பு பஜனை மடம் இருந்தது. உரியடி திருவிழா நடக்கும் என்றால் சரிதான். உரியடி திருவிழா எங்கள் சமுதாய மக்கள் மட்டும்தான் நடத்துவோம். நாகராஜா கோவிலின் தெற்கு ரத வீதியிலிருந்து நேராக வந்தால் கீழ தெரு முத்தாரம்மன் கோவில் உள்ளது. வள்ளியமடத்து கோவில், அழகம்மன் கோவில், நாகராஜா கோவில் தேர் திருவிழா அன்று சப்ரம் வரும் நாளில் நாங்கள் தேங்காய், பழம் உடைத்து நாங்கள் வழிபடுவோம். நான் உண்மைக்கு மாறாக நிரூபண வாக்குமூலத்தில் இந்த அறக்கட்டளை வருவாய் ஆவணங்களின் படி ஆதி முனவரி வேளாளர் பணிக்கர் மடம், ஆதிமா முனிவர்

வெள்ளையப்ப பணிக்கர் மடம், ஆதிமா முனிவர் வேராயுத பணிக்கர் மடம், ஆதிமா முனிவர் ஊர்வகை டிரஸ்ட், ஆதிமா முனிவர் மடம், நாகர்கோவில் இடைய சமுகத்தார் ஊர்வகை, ஆதிமா முனிவர் கோனார் சமுதாய வகை மற்றும் பிற பெயர்களையும் கொண்டுள்ளது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அது பற்றி ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அது சம்பந்தமாக அதை திருத்த வேண்டும் என்று கோரி மனு தாக்கல் செய்துள்ளேன். அது O.S. 14/1108 M.E. இந்த வழக்கு நிலுவையில் உள்ளது. பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் இது சம்பந்தமாக எடுத்து இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பிரதிவாதி தகப்பனாருக்கு 18 சென்ட் தரைவாடகைக்கு கொடுத்ததை பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தை தாக்கல் செய்துள்ளோம். வேறு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. O.S. 394/1980 வா.சா.ஆ. 2 மற்றும் 3 ஆவணங்களில் கண்டுள்ள வழக்கில் முதல் வாதி தரப்பினர் அல்ல என்றால் சரிதான். ஆனால் முதல் வாதிக்கு சார்பில் அதன் டிரஸ்டிகள் தாக்கல் செய்த வழக்கு. கட்டளை 1 விதி 8 ன் உரிமையியல்நடைமுறை சட்டத்தின்படி மேற்படி வழக்கின் மனு தாக்கல் செய்து வழக்கு நடத்தவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரிவு 92 உரிமையியல் நடைமுறை சட்டப்படி மேற்படி வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் அது சட்டம் பற்றிய கேள்வி என்பதால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ. 2 மற்றும் 3 ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை ஆனது சட்டம்பூர்வமற்றது என்றால் சரியல்ல. மேற்படி வழக்கில் வாதிகளுக்கு இந்த வழக்கின் முதல் வாதிக்கு

சார்பாக வழக்கு தாக்கல் செய்ய எவ்வித அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி வழக்கில் முத்தாரம்மன் கோவில் தரப்பினராக சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். கோவிலில் அன்னதானம் நடத்துவது கிடையாது. பழைய சர்வே எண்கள். 1421, 1427, 1430, 1433 ஆகிய நான்கு சர்வே எண்கள் ஆதிமா முனிவர் வெள்ளையப்ப பணிக்கர் மடம் என்ற பெயரில் உள்ளது. புதிய சர்வே எண்கள். P7, P8 ஆகும். அந்த சர்வே எண்களில் குடியிருப்பவர்கள் தங்கள் பெயருக்கு பட்டா மாறுதல் செய்துள்ளார்கள். அது சம்பந்தமாக நாங்கள் மதுரை கிளை உயர் நீதிமனறத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். பட்டா எண். 6077 ஆதிமாமுனிவர் வெள்ளையப்ப பணிக்கர் மடம் பெயரில் உள்ளது என்றால் சரிதான். கூடுதல் குறுக்கு விசாரணை வேறொரு தேதியில் ஒத்தி வைக்கப்படுகிறது.